சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 10.02.2026
வா.சா.2 – விஜயவசந்த் S/o இருளப்பன்
O.S. No.59/2022
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

அன்னலெட்சுமி என் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக அனைத்து விபரங்களும் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகளின் தாயாரான வாணி என்பவரை சுமார் 10-15 ஆண்டுகளாக தெரியும். வாதி பிரதிவாதிகளின் தாயாருக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் நான் உடன் இருந்தேனா என்றால் உடன்இருந்தேன். ஈடு அடமான பத்திரத்தில் நான் சாட்சியாக கையெழுத்திடவில்லை என்றால் சரிதான். நான்பத்திர அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றும் அதனால் தான் நான் சாட்சியாக கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் போயிருந்தேன். பிரதிவாதியினுடைய கணவரும், மகனும் நாங்கள் போட்டுகொள்வதாக கூறியதால் 2 பேர்கள் போதுமானது என்று இருந்துவிட்டோம். பிரதிவாதிகளையோ, பிரதிவாதிகளின் தாயாரான வாணியையோ எனக்கு நேரடியாக தெரியாது என்றும் வாதி எனது தங்கை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாணியும் நானும் பக்கத்து ஊர்க்காரர்கள். என் ஊருக்கும் வாணியின் ஊருக்கும் இடையே சுமார் அரை கிலோமீட்டர் தொலைவு தான் இருக்கும். பிரதிவாதியின் தாயார் 50000ரூபாயை வட்டியில் வரவு வைக்கும்படி என்னிடம் கொடுத்தார். வாதி அன்னலெட்சுமியிடம் கொடுத்துவிடும்படி கூறினார். அந்த பணத்தை ஈடுகட்டிய அடமான பத்திரத்தின் ஒளிநகலில் பின்னால் வரவு வைத்து கொடுத்துள்ளார்கள். மேற்படி வரவு வைத்த தேதி தெரியவில்லை. வருடம் 2015ம் ஆண்டு ஆகும். 50000ரூபாயை வரவு வைத்த பத்திரத்தை வழக்கில்

தாக்கல் செய்யவில்லை என்றால் வாணியிடம் தான் கொடுத்துள்ளேன். கடன் தொகையை வரவு வைக்கவேண்டுமென்றால் அசல் பத்திரத்தில் தான் வரவு வைக்கவேண்டுமென்றால் அதுபற்றி தெரியவில்லை. வாணி 50000ரூபாயை வரடவு வைக்கவேண்டும் என்று எண்ணியிருந்தால் நேரடியாக வாதியிடமே அவர் கொடுத்திருப்பார் என்றும் என்னிடம் கொடுக்கவேண்டடிய அவசியம் இல்லை என்றால் சரியல்லநான் தான் அருகாமையில் இருக்கிறேன் என் தங்கை வாதி 8 கி.மீ தொலைவில் இருபபதால் என்னிடம் கொடுத்தார். பிரதிவாதியின் தாயார் வாணி உயிருடன் இருந்த காலத்தில் வழக்கை தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவர் இறந்தபிறகு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தாயார் வாணி வாதியிடம் கடனாக எதுவும் தொகை பெறவில்லை என்றும் ஆகவே இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.02.10 22:24:31 +0530

Sub Judge
Melur